# 4 . கைத்தொழில்

## 4.1 பொதுவான போக்குகள்

1996 ஆம் ஆண்டு மார்ச் மாதப் பிற்பகுதியிலிருந்து மூன்றாவது காலாண்டு முடிவுவரை நிலவிய நீண்டகால பாதகமான மின் வெட்டின் மத்தியிலும் கைத்தொழில் வெளியீடானது இவ்வாண்டில் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. ஒப்பீட்டு ரீதியான வளர்ச்சி வீதம் 1995 ஆம் ஆண்டு 10.2 சதவீதமாக இருந்தது. தனியார் துறையினர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊக்குவிப்பு நடவடிக்கைகளான இறக்குமதி தீர்வைச் சலுகைகளை தேசிய அபிவிருத்தி வங்கி, மற்றும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மூலம் சிறப்புக் கடன் வசதிகளை மின் உருவாக்கிகளை இறக்குமதி செய்வதற்கும் மின் உருவாக்கிகளை கொள்வனவு செய்வதற்கும், மறைமுக மானியங்களை வழங்கியதன் மூலம், மின் உற்பத்தி அதிகரித்ததால் மின் வெட்டுக் காரணமாக கைத்தொழில் வெளியீட்டின் இழப்புக்களைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. 1996 ஆம் ஆண்டுக்கான கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சிக்கு பதனிடும் வலயங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தயாரிப்பு வெளியீட்டின் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது. இதற்கான காரணம் கைத்தொழில் பதனிடும் வலயங்கள் மின் வெட்டினால் மிகவும் குறைவாக பாதிக்கப்பட்டதாகும். அரசுக்குச் சொந்தமான பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலையின் தடங்கலற்ற செயற்பாடு, ஏற்றுமதி பதனிடும் வலயத்திற்கு வெளியேயுள்ள தனியார் துறை கைத்தொழில் நிலையங்களின் மிதமான கைத்தொழில் உற்பத்திகள், கைத்தொழில் வெளியீட்டின் பொதுவான வளர்ச்சியின் போக்கிற்கு சாதகமான பங்களிப்பைச் செய்தன. மொத்தத் தயாரிப்பு வெளியீட்டில் 83 சதவீதத்திற்கு வகை கூறும் தயாரிப்புக் கைத்தொழில்கள் 1996 ஆம் ஆண்டு பொருளாதார வளர்ச்சியில் 33 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தன.

முதலீட்டுச் சபையின் (முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள்) 17 ம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளின் உண்மையான முதலீடுகளின் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பானது ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் விரிவாக்கத்திற்குக் கணிசமான அளவு பங்களிப்புச் செய்தது. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஏனைய மேற்கத்திய நாடுகள் போன்றவற்றில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியும் ஏற்றுமதி சார்ந்த

**வரைபடம் 4.1**
**கைத்தொழில் உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளமைப்பும்**

**வரைபடம் 4.1.1**
**உண்மை நியதிகளில் பொதுவான தனியார்துறை வளர்ச்சி வீதங்கள்**




**வரைபடம் 4.1.2**
**கைத்தொழில் உற்பத்தியின் உள்ளமைப்பு 1996**




1. – உணவு, குடிபானம், புகையிலை
2. – புடைவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள்
3. – மரம், மர உற்பத்திகள்
4. – தாள், தாள் உற்பத்திகள்
5. – இரசாயனம், பெற்றோல், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள்
6. – உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்
7. – அடிப்படை உலோக உற்பத்திகள்
8. – உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள், போக்குவரத்துக்கருவிகள்
9. – வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள்

கைத்தொழில்களின் விரிவாக்கத்திற்கு ஆதரவாக இருந்தது. இருந்தும் 1996ஆம் ஆண்டில் தற்காலிகமான உற்பத்தித் தடைகள் நிலவியதால் முழுமையான நன்மைகளை அடைய முடியவில்லை. இலங்கை ரூபாவின் மிதமான பெறுமானத் தேய்வும் ஏற்றுமதித் துறைக்கு உதவியாக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது தொழில் அமைதியின்மை 1996 ஆம் ஆண்டில் குறைவாக இருந்தது. குறைந்தளவான உள்ளகக் கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்தும் துரித கைத்தொழில் வளர்ச்சிக்கு பிரதான தடையாக இருக்கின்றன.

## 4.2 உற்பத்தி

இலங்கை மத்திய வங்கி நடாத்திய வருடாந்த கைத்தொழில் உற்பத்தி அளவீட்டை அடிப்படையாகக் கொண்டு 1996 ஆம் ஆண்டுக்கான மொத்த கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி 7.3 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த கைத்தொழில் உற்பத்தி அளவீடானது முதலீட்டுச் சபைக்குள் உள்ளடக்கப்படாத 460 தொழில் முயற்சிகள், அரசதுறைக் கைத்தொழில்களின் உற்பத்தித் தரவுகள், முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதித் தரவு

அட்டவணை **4.1**

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1992 - 1996

(1990 நிலையான விலைகளில்)

| வகை | ரூ. ப. இலட்சம் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) | 1995 | 1996 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 26,087 | 28,304 | 30,445 | 33,641 | 35,908 | 10.5 | 6.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 38,805 | 45,540 | 48,333 | 55,480 | 58,332 | 14.8 | 5.1 |
| 3. மர, மர உற்பத்திகள் | 797 | 939 | 1,085 | 1,243 | 1,321 | 14.5 | 6.2 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2,628 | 3,140 | 3,565 | 3,508 | 3,550 | -1.6 | 1.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம்,இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 19,752 | 23,683 | 25,838 | 27,543 | 31,135 | 6.6 | 13.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,451 | 10,349 | 11,643 | 12,516 | 13,360 | 7.5 | 6.7 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,294 | 1,178 | 1,568 | 1,377 | 1,636 | -12.2 | 18.8 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,314 | 5,203 | 5,931 | 6,139 | 6,252 | 3.5 | 1.8 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,124 | 2,366 | 2,617 | 3,005 | 3,443 | 14.8 | 14.5 |
| மொத்தம் | 106,252 | 120,702 | 131,025 | 144,452 | 154,937 | 10.2 | 7.3 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

அட்டவணை **4.2**

தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் 1992 - 1996

1990 = 100

| வகை | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) | 1995 | 1996 (அ) |
| **1. உணவு, குடிபானங்கள், புகையிலை** | **120** | **129** | **140** | **155** | **166** | **10.4** | **6.9** |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள | 144 | 168 | 179 | 206 | 217 | 14.8 | 5.1 |
| 3. மர, மர உற்பத்திகள் | 106 | 123 | 149 | 170 | 165 | 14.1 | -2.8 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 184 | 226 | 263 | 266 | 279 | 1.0 | 4.7 |
| 5 இரசாயனம், பெற்றோலியம்,இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 121 | 132 | 159 | 196 | 224 | 23.6 | 14.2 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 137 | 159 | 212 | 228 | 243 | 7.5 | 6.7 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 167 | 225 | 266 | 305 | 351 | 15.0 | 15.2 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 126 | 124 | 141 | 147 | 150 | 3.9 | 1.8 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 127 | 152 | 168 | 193 | 221 | 14.8 | 14.5 |
| மொத்தம் | 137 | 155 | 172 | 192 | 205 | 12.1 | 6.9 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

மதிப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. நடைமுறை விலைகளில் மொத்த கைத்தொழில் உற்பத்திகளின் வெளியீடு 17.5 சதவீதத்தால் அதிகரித்ததன் மூலம் தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்கான 9.5 சதவீதம் கொண்ட உள்ளடக்க விலைச் சுருக்கியைக் காட்டியது.

1996 இல் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி மூன்று முக்கிய வகைகளான இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், இறப்பரும் பிளாத்திக்குப் பொருட்களும், புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள் என்பவற்றிலிருந்தே கிடைத்தன. இம் மூன்று வகைகளும் மொத்த கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சியில் 83 சதவீதத்திற்கு உதவின.

## தனியார்துறைக் கைத்தொழில்கள்

தனியார் துறையின் கைத்தொழில் வெளியீடு 1995 ஆம் ஆண்டின் 12.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1996 ஆம் ஆண்டில் 6.9 சதவீதம் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டது. இது 1996 ஆம் ஆண்டு மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 90 சதவீதத்திற்கு வகை கூறியது. தனியார்துறைக் கைத்தொழில் வெளியீட்டிலேற்பட்ட வளர்ச்சியானது, முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களிலேற்பட்ட 10.1 சதவீதங் கொண்ட வளர்ச்சியினதும், முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில்களிலேற்பட்ட 3.7 சதவீதங் கொண்ட வளர்ச்சியினதும் இணைந்த விளைவாகும். இலங்கை முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் விரிவாக்கத்துக்கு பிரதானமாக புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் மற்றும் இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், இறப்பரும் பிளாத்திக்குப் பொருட்களும் என்பன **வழிவகுத்தன. முதலீட்டுச் சபை சாராத** கைத்தொழில்களின் விரிவாக்கம் உணவு, குடிபானங்களும் புகையிலையும் மற்றும் அடிப்படை உலோக உற்பத்தி வகைகள் என்பனவற்றில் பிரதானமாக பிரதிபலிக்கப்பட்டது.

## புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்

1995 ம் ஆண்டின் 14.8 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும் போது புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களின் வெளியீடு உண்மை நியதிகளில் 5.1 சதவீதத்தால் 1996 இல் அதிகரித்தது. இவ்வகையில் முதலீட்டுச் சபை கைத்தொழில்கள் 6 சதவீதத்தாலும், முதலீட்டுச்சபை சாராத கைத்தொழில்கள் 1.7 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன. இவ்வகை உற்பத்திகள் 1996ஆம் ஆண்டு மெதுவான வளர்ச்சியைக் காட்டிய போதிலும் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 39 சத வீதத்திற்கு வகை கூறியதுடன் தனியார் துறைக் கைத்தொழில் வெளியீட்டில் 33.7 சதவீத பங்களிப்பைக் கொண்டிருந்தது.

1996 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த புடவை, அணியும் ஆடைகள் அளவு நியதிகளில் பார்க்கும் போது 7.3 சதவீதத்தால் அதிரித்துள்ளது. 1995 ஆம் ஆண்டில் 3,980 இலட்சம் சதுர மீற்றருக்குச் சமனாக இருந்த இவ் ஏற்றுமதிகளின் அளவு 1996 ஆம் ஆண்டு 14,270 இலட்சம் சதுர மீற்றருக்குச் சமனாக அதிகரித்துள்ளது. பெறுமதி நியதிகளில் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த மொத்த புடைவைகள் மற்றும் ஆடைகள் 11.1 சதவீதத்தால் அதிகரித்துள்ளள. 1996 ஆம் ஆண்டில் அனுமதிப்பங்கு அடிப்படையில் ஐக்கிய அமெரிக்க சந்தைக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அணியும் ஆடைகள் அளவு நியதிகளில் 6.5 சதவீதத்தால் அதிகரித்த வேளையில், 1996 இன் நிலவிய இடர் மிகுந்த காலப் பகுதியில் ஒப்பந்தத்தை மீறாத முறையில் அளவுப் பங்கின் கீழ் தமது ஏற்றுமதிகளைப் பாதுகாக்கும் வகையில் ஏற்றுமதி முயற்சி செய்தமையால் அனுமதிப் பங்கின் கீழ் வராத ஆடைகளின் ஏற்றுமதிகள் 12.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. அனுமதிப்பங்கின் கீழ் வரும் ஆடை அணிகள் சாராத உற்பத்திகளின் **ஏற்றுமதிகளும் 8.8 சத வீதத்தால் அதிகரித்தன.** 1996 ஆம் ஆண்டு அனுமதிப்பங்கு முறையின் கீழ் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்த அணியும் ஆடைகள் மொத்த அணியும் ஆடைகள் ஏற்றுமதியில் 76 சதவீதத்துக்கு வகை கூறியது.

அனுமதிப் பங்குகளின் கிடைப்பனவானது ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளைப் பொறுத்தவரை 1996 ஆம் ஆண்டு கணிசமான அளவு அதிகரிப்பைக் காட்டியது. ஐக்கிய நாடு

கள் சந்தையைப் பொறுத்த வரையில் பின்னப்பட்ட ஆண் பெண் மேலங்கிகள், நீளக் காற்சட்டைகள், உள்ளங்கிகள், மேலுறைகள், நீண்ட முழு ஆடைகள், மென் மயிர் மற்றும் துணிச்சடைத் துவாய்கள் போன்ற அனுமதிப் பங்கு வகைகளில் பயன்பாட்டு வீதமானது 100 சதவீதத்தை யடைந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ஆண்களுக்கும் சிறுவர்களுக்குமான நீண்ட முழு ஆடை போன்ற தடித்த மேலங்கிகள், பெண்களுக்கும் சிறுமிகளுக்குமான நீண்ட முழு ஆடைகள் குளிர் ஆடைகள் போன்ற வகைகளின் தொடர்பாக குறைந்தளவான பயன்பாட்டு வீதமே பதிவு செய்யப்பட்டது. ஐரோப்பிய ஒன்றிய அனுமதிப் பங்கைப் பொறுத்தவரை மிகவும் பிரபல்யமான வகைகளாக பெண் சிறுமிகளுக்கான, நெய்யப்பட்ட மற்றும் பின்னப்பட்ட மேலங்கிகள், பெண்களுக்கான நீளக் காற்சட்டைகள் மற்றும் கட்டைக் காற்சட்டைகள் என்பன காணப்பட்டன. சில வகையான (தலைக்கவிகையுடானான நீண்ட குளிர் ஆடைகள், தலைக்கவிகையுடனான துருவ ஆடைகள், காற்றுத் தடுப்பு ஆடைகள்) அனுமதிப்பங்குப் பயன்பாட்டு வீதத்தைப் பொறுத்த வரை 1996 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைக் காட்டியது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்படி 1996 ஆம் ஆண்டு முடிவில் 845 ஆடைத் தொழிற்சாலைகள் இருந்தன. இந்தத் தொழிற்சாலைகள் 251,537 நேரடி வேலைவாய்ப்புக்களை வழங்கின. 200 ஆடைத்தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளில் 154 தொழிற்சாலைகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளையில் முகாமைத்துவப் பிரச்சனை காரணமாக 06 தொழிற்சாலைகள் மூடப்பட்டன அல்லது ஒன்றிணைக்கப்பட்டன. இந்த 154 தொழிற்சாலைகளும் கடந்தவாண்டில் இருந்தது போல 76,821 பேரை வேலைக்கு அமர்த்தியது. 1996 ஆம் ஆண்டில் இந்தத் தொழிற்சாலைகளின் ஏற்றுமதி வருவாய்கள் ரூபா 446,590 இலட்சமாக மதிப்பிடப்பட்டு ரூபா 43,000 இலட்ச அதிகரிப்பைக் காட்டியது.

நாட்டில் 140 க்கும் மேற்பட்ட ஆடை உற்பத்தி நிறுவனங்கள் இருந்தன. இதில் 10 பாரிய நிறுவனங்கள் பெரும்பகுதி உற்பத்திக்கு காரணமாக இருந்தன. கடந்த ஆண்டைப் போன்று 1996 ஆம் ஆண்டும் ஏற்றுமதி சார்ந்த ஆடை உற்பத்திகள் சிறந்த முறையில் தொழிற்பட்ட வேளையில் உள்ளூர்ச் சந்தைக்கு அவற்றை வழங்கி, முன்னைய பாதுகாப்புத் தீர்வையின் கீழ் வாய்ப்பினைப் பெற்றவர்கள் இறக்குமதிப் போட்டியினால் எதிர்நோக்கப்படும் சந்தைப் படுத்தல் பிரச்சினைகளின் காரணமாக தொடர்ந்தும் இடர்பாடுகளை எதிர்நோக்கினர். உள்நாட்டு ஏற்றுமதிக் கைத்தொழில்களுக்கு மூலப் பொருட்களை வழங்கக் கூடியதாக இருந்தமை உள்நாட்டில் உற்பத்தியாக்கப்பட்ட ஆடைகள் தொடர்பாக பிரதான முன்னேற்றமாக இருந்தது.

அட்டவணை **4.3**
கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி
(நடைமுறை விலைகள்)

| வகை | ரூ. ப. இலட்சம் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) | 1995 | 1996 (அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 34,157 | 39,709 | 45,054 | 54,927 | 68,209 | 21.9 | 24.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 53,929 | 70,057 | 78,211 | 89,944 | 101,627 | 15.0 | 13.0 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,005 | 1,230 | 1,601 | 1,929 | 2,171 | 20.5 | 12.5 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 2,586 | 3,438 | 4,066 | 4,595 | 5,069 | 13.0 | 10.3 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 23,817 | 28,876 | 34,017 | 38,321 | 46,936 | 12.7 | 22.5 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 10,582 | 12,351 | 14,580 | 16,740 | 18,997 | 14.8 | 13.5 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,424 | 1,497 | 1,909 | 1,736 | 2,248 | -9.1 | 29.5 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,948 | 5,915 | 7,122 | 7,977 | 8,807 | 12.0 | 10.4 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,658 | 3,402 | 4,083 | 5,271 | 6,183 | 29.1 | 17.3 |
| மொத்தம் | 136,106 | 166,475 | 190,643 | 221,440 | 260,247 | 16.2 | 17.5 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

நாட்டின் ஆடைத் தொழிலுக்கான மூலப்பொருள் தேவையில் 10 சதவீதத்துக்குக் குறைந்த அளவான மூலப்பொருட்களை வழங்கக் கூடிய தகுதியைக் கொண்டவர்களாகவே உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்கள் இருந்தனர்.

1995 ஆம் ஆண்டு உலக வர்த்தக அமைப்பு நிறுவப்பட்டதைத் தொடர்ந்து பல்நூலிழை உடன்படிக்கையின் கீழ் வந்துள்ள ஏற்கனவேயுள்ள இருபுடை புடவை உடன்படிக்கைகள் அனைத்தும் 2005 ஆம் ஆண்டுக்குள் கட்டம் கட்டமாக நீக்கப்படவிருக்கின்றன. இந்த அனுமதிப்பங்கு முறை 4 கட்டங்களாக நீக்கப்படவிருக்கிறது. இதில் 16 சதவீதம் 1995 ஆம் ஆண்டிலும் 17 சத வீதம் 1998 ஆம் ஆண்டிலும், 18 சதவீதம் 2002 ஆம் ஆண்டிலும் மீதியாகவுள்ள 49 சதவீதம் 2004 ஆம் ஆண்டிலும் செயற்படுத்தப்பட்டு 2005 ஆம் ஆண்டுக்குள் புடவைகள் ஆடைகள் துறையில் சுதந்திர வர்த்தகம் அடையப்படும். ஆகவே, தற்போதைய அனுமதிப்பங்கு முறையினால் நன்மையடைய இலங்கையும், ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளும் கடும் போட்டி வியாபார சூழ்நிலையை சிறந்த முறையில் எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ளுமுகமாகவும், சவால்களைச் சந்திக்கும் முகமாகவும் முக்கியமான அமைப்பு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்த தங்களை தயார்படுத்த வேண்டும்.

### உணவு, குடிபானங்கள், புகையிலை.

கடந்த ஆண்டுக்கான 10.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது இந்த வகை உற்பத்தி 1996 ஆம் ஆண்டில் 6.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளதுடன் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 27.1 சதவீதத்துக்கு வகை கூறி தனியார் துறைக் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சிக்கு 26.9 சதவீதப் பங்களிப்பை வழங்கியது. பதனிடப்பட்ட புகையிலையும் சிகரட்டுக்களும், சீரிசீ( வெட்டி கிழித்து சுருட்டிய) தேயிலை மற்றும் உறையிலடைக்கப்பட்ட தேயிலை, பியர் மற்றும் மதுபானம், பாற்பண்ணை உற்பத்திகள், பதனிடப்பட்ட தேங்காய் மற்றும் இறைச்சி உற்பத்திகள் என்பன சாதகமான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தன. சிகரட்டுக்கள் மீது அதிக வரி விதிக்கப்பட்ட போதிலும் புகையிலை உற்பத்தி 5.7 சதவீதத்தால் அதிகரித்தது. புகையிலைக் கைத்தொழிலானது மின் வெட்டு மூலமோ இலங்கை மின்சார சபையின் வேலைநிறுத்தம் மூலமோ பதிப்புக்குள்ளாகவில்லை. ஏனெனில் பிரதான உற்பத்திகள் தமது சொந்த மின் உருவாக்கிகள் மூலம் மேற்கொள்ளப்பட்டமையாகும். 1995 ஆம் ஆண்டு பியர் மீதான கலால் தீர்வை குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து இதற்கான உள்நாட்டுக் கேள்வி கூடியதுடன் உள்நாட்டு உற்பத்தியும் அதிகரித்தது. அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி காரணமாக குடிவகை மதுசாரம் 1996 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. தேயிலைப் பதனிடுதலின் வளர்ச்சி 1996 ஆம் ஆண்டு அதிகரித்த உற்பத்தி அளவையும் உயர்ந்த விலைகளையும் பிரதிபலித்தது. இறைச்சி உற்பத்தித்துறையானது மின்வெட்டு நிலவிய காலப்பகுதியில் உற்பத்தி இழப்பைக் காட்டியது. ஆனால் ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் முழுமையாக வழமைக்குத் திரும்பியது. மீன் விலைகள் தொடர்ந்தும் உயர்வாக இருந்ததால் இக் காலப்பகுதியில் இவ்வுற்பத்திகளுக்கான கேள்வி மிகவும் தீவிரமாக இருந்தது. கோதுமை மாவுக்கான உதவுதொகை குறைக்கப்பட்டமையினால் கோதுமை மாவின் விலையிலேற்பட்ட அதிகரிப்பானது பாணுக்கும் கோதுமை மா பதனிடலுக்குமான கேள்வியைக் குறைத்தது. பழம் மற்றும் மரக்கறிகளை பதனிடும் கைத்தொழில் இக்கால கட்டத்தில் நிலவிய வரட்சி, மின் வெட்டுக்கள் காரணமாக ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பெருமளவு பின்னடைவை எதிர்நோக்கியது. இவ் உற்பத்தி தொடர்பாக முழுமையாக அதிகரித்த தேவை காணப்பட்ட போதிலும் மீள முடியா நிலை காணப்பட்டது. 1995 ஆம் ஆண்டு கோழித்தீன் உற்பத்தி மிதமான வளர்ச்சியை பதிவு செய்ததுடன் 1996 ஆம் ஆண்டில் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு கோழிப்பண்ணையாளர் மின் வெட்டு நிலவிய காலப்பகுதியில் பெரும் பிரச்சனைகளை எதிர்நோக்கியமையே காரணமாகும்.

### இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்.

முன்னைய ஆண்டின் 23.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் தனியார் துறையில் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் ஆகிய வகை 1996 ஆம் ஆண்டில் 14.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த

வளர்ச்சி பிரதானமாக முதலீட்டுச் சபை கைத்தொழில்களிலிருந்து வந்துள்ளது. ரயர்கள், ரியூப்புக்கள், இறப்பர் வளையங்கள், இறப்பர் உறைகள் மற்றும் கையுறைகள் பிவிசி தொங்கு பைகள் மற்றும் பிவிசி மழை அங்கிகள் சித்தெட்டிக் சாக்குகள் போன்ற இறப்பர் உற்பத்திகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் காணப்பட்ட மைக்கு முக்கிய இறக்குமதி நாடுகளிலிருந்து குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம், மத்திய கிழக்கு நாடுகளில் இப்பொருட்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. 1996 ஆம் ஆண்டு இறப்பர் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி உள்நாட்டுச் சந்தையில் கூட விரிவடைந்தது காணப்பட்டது. 15 பாரிய உள்ளூர் இறப்பர் உற்பத்திக் கைத்தொழில்களின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறப்பர் பாவனை 1996 ஆம் ஆண்டு 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. பொலித்தீன் பைகள் மற்றும் நெய்யப்பட்ட பொலியுப்றோபிலின் ஆகியவற்றின் உள்நாட்டுக் கேள்வி அதிகரித்ததால் இவ்வகைப் பொருட்களும் பிளாஸ்டிக் உற்பத்திப் பொருட்களில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. கைத்தொழில் மூலங்களின் படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மருந்துப் பொருட்களின் தரம் முன்னேற்றமடைந்ததன் காரணமாக மருந்தாக்கல் கைத்தொழில் வெளியீடானது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. சவர்க்காரம் மற்றும் குளியலறைப் பொருட்களைப் பொறுத்தவரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைவிட குறைந்த விலையில் கிடைத்த தனால் இப் பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்தது. திறமையான விளம்பர பிரச்சாரங்கள், உற்பத்திப் பொருட்களின் மேம்பட்ட தரம் என்பனவும் இவ்வகைப் பொருட்களுக்கு உள்ளூர் நுகர்வோர் முன்னுரிமை கொடுத்தமைக்கு உதவின.

### ஏனைய கைத்தொழில் உற்பத்திகள்

முதலீட்டுச் சபைக் கைத்தொழில் நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட மினுக்கப்பட்ட மட்பாண்ட ஓடுகள், வெண்களிமண் உருவச் சிலைகள், உருவமைக்கப்பட்ட மட்பாண்டப் பொருட்கள், பதனிடப்பட்ட சிலிக்கா, பளிங்குக் கல், படிகைக்கற்பாளங்கள் என்பனவற்றின் உயர் வெளியீட்டு வளர்ச்சியினால் உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திவகை 1996 இல் 6.7 சதவீத வளர்ச்சியை எய்தியது. உள்நாட்டுக் கட்டிடக் கைத்தொழில் தொடர்பாக அதிகரித்த கேள்வியை ஈடுசெய்யக் கூடிய வகையில் மட்பாண்ட ஓடுகள் மற்றும் ஏனைய மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள், கூரை உற்பத்திப் பொருட்கள், சீமெந்து ஆகியவற்றின் வெளியீட்டு மட்டங்கள் 1996 ஆம் ஆண்டில் மேலும் உயர்வடைந்தன. வைரங்களை வெட்டிப் பட்டை தீட்டும் கைத்தொழில்களில் ஏற்பட்ட தொழிலாளர் அமைதியின்மையும் மற்றும் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் வேலையை விட்டு தாமாக விலகிச் செல்வதினால் ஏற்பட்ட தொழிலாளர் இழப்புக்களின் காரணமாக வைரக்கற்கள் கைத்தொழிலில் தற்காலிக பின்னடைவு ஏற்பட்டது. இலத்திரனியல் மற்றும் மின்னியல் பொருட்கள், போக்குவரத்துக்கருவிகள் ஆகிய வற்றில் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்தியின் வளர்ச்சியில் பிரதிபலிக்கப்பட்டது. முதலீட்டுச் சபை சாராத துறையில் விவசாய மற்றும் மின் பொறிகள், மின்கம்பிகள் மற்றும் உலோக உற்பத்திகள் கைத்தொழில்கள் குறிப்பிடத்தக்க வளர்ச்சி வீதங்களை பதிவு செய்தன. கட்டிட வாக்கக் கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சியானது மின் கம்பிகள் மற்றும் உலோக உற்பத்திகள் துறைக்கு உதவின. ஆயினும் மோட்டார் கோச்சுக்கள் மற்றும் லொறிகளை வடிவமைத்தல், குளிர்சாதன பெட்டிகள் மற்றும் மின் குமிழ்கள் கைத்தொழில் உற்பத்தியானது வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இவ்வகைப் பொருட்களின் அதிகரித்த போட்டி காரணமாகக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன. இதனைத் தவிர அரசாங்கக் கட்டளைகள் குறைந்ததாலும், தனியார் துறையினரின் கேள்வி குறைவடைந்த தாலும் மோட்டார் கோச்சுக்கள் மற்றும் லொறிகளை வடிவமைப்பதற்கான கைத்தொழில் கடுமையான பின்னடைவை அனுபவித்தன.

தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்களின் வகை மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் இதில் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களால் உற்பத்தி செய்யப்பட்டவை உயர் வெளியீட்டு மட்டத்தை பிரதிபலித்தன. பகுதியளவிலான இறக்குமதிப் போட்டி காரணமாக பயிற்சிப் புத்தகங்கள், சுட்டுத் துண்டுகள், நெளிந்த அட்டைப் பெட்டிகள் ஆகிய உள்நாட்டுச் சந்தை

சார்ந்த தாள் உற்பத்திகள் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. மரம் மீதான இறக்குமதித் தீர்வைகள் நீக்கப்பட்டமை, மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் தொடர்பாக புரள்வுவரி 20 சதவீத்திலிருந்து 6 சதவீதமாகக் குறைக்கப் பட்ட போதிலும் 1996 ஆம் ஆண்டில் மர உற்பத்திகளின் வகை வீழ்ச்சியடைந்தது. மேலும் இக்கைத்தொழிலானது உள்நாட்டு வழங்கலில் ஏற்பட்ட பற்றாக்குறையால் பெரிதும் பாதிக்கப் பட்டது.

**வரைபடம் 4.2**
**கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி**
**1990-(நிலையான விலைகள்)**




**வரைபடம் 4.3**
**கைத்தொழில் ஏற்றுமதி வருமானங்கள்**
**(1990 - நிலையான விலைகள்)**




கடந்த ஆண்டின் இதே வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது முதலீட்டுச் சபை சாராத அடிப்படை உலோக உற்பத்திகளின் வெளி யீடானது 1996 ஆம் ஆண்டில் 15.2 சதவீதத்தினால் அதிகரித்தது. கட்டடவாக்கச் செயற்பாடுகளின் வளர்ச்சியின் பயனாக இரும்பு, உருக்கு மற்றும் அலுமினியம் போன்றவற்றின் வெளியீடு அதிகரித்துள்ளது.

## பொதுத்துறைக் கைத்தொழில்கள்

1995 இல் 6.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு மாறாக பொதுத்துறைக் கைத் தொழில்களின் வெளியீடானது 1996 இல் உண்மை நியதிகளில் 10.8 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் (12 சதவீதம்) உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உயர்ச்சி காரணமாக இந்நிலை உருவானது. மொத்தக் கைத்தொழில் உற்பத்தி வெளியீட்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபன உற்பத்திகள் 87 சதவீதத்துக்கு வகை கூறின. அரச மரக்கூட்டுத் தாபனம் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் ஆகியனவற்றின் செயலாற்றம் அடையப்பட்டதால் பெற்றோலியம் தவிர்ந்த பொதுத்துறை கைத்தொழில் வெளியீடும் 3 சதவீதத்தினால் அதிகரித்தது.

1996 இல் வெளியீட்டில் அதிகரிப்பை ஏற் படுத்திய முயற்சிகளாக இலங்கை கனியமணல் கூட்டுத்தாபனம் (26 சதவீதம்) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் (23சதவீதம்), அரச மரக்கூட்டுத் தாபனம் (20 சதவீதம்) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (12 சதவீதம்), லங்கா பொஸ்பட் லிமிட்டெட் (11 சதவீதம் ) மற்றும் லங்கா உப்பு லிமிட்டெட் (3 சதவீதம்) ஆகியன காணப் படுகின்றன.

குறிப்பாக எகிப்து மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் எச்.ரி. இல்மனைட்டுக்கு ஏற்பட்ட சாதகமான கேள்வி காரணமாக இலங்கைக் கனியமணல் லிமிட் டெட்டின் உற்பத்திப் பெறுமதியில் வளர்ச்சி ஏற்பட்டது. வன திணைக்களம் பெருமளவிலான மரக்குற்றிகளை அரிவுக்காக அரச மரக் கூட்டுத் தாபனத்துக்கு வழங்கியது. இலங்கைப் பெற் றோலிய கூட்டுத்தாபனம் தடையின்றி தொழிற் பட்டதாலும் மற்றும் வெப்பவலுவை உற்பத்தி செய்வதற்காக பெற்றோலிய உற்பத்திகளுக்கு அதிக கேள்வி ஏற்பட்டதாலும் 1996 இல் இலங்கைப் பெறறோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு அதிகரித்தது.

இயந்திர சாதனங்களின் திருத்தம் மற்றும் வரட்சி காரணமாக கரும்பைப் பெறுவதற்கு தாமதம் ஏற்பட்டதாலும் செவனகல சீனி கைத்தொழில் லிமிட்டெட்டின் வெளியீடு 14

சதவீதத்தால் குறைவடைந்தது. தாள் உற்பத்தி பொருட்கள் மீதான இறக்குமதி தீர்வைகள் குறைக்கப்பட்டதனால் உள்நாட்டுச் சந்தையில் அதிகரித்த போட்டி பேப்பர் கம்பனி லிமிட்டெட்டின் 12 சதவித வெளியீட்டுக் குறைவுக்குக் பிரதான காரணியாக இருந்தது. மேலும் இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி கூட்டுத்தாபன லிமிட்டெட்டின் வெளியீடானது 3 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

## 4.3 கூட்டிய பெறுமதியும் இயளலவுப் பயன்பாடும்

பெயரளவு நியதிகளில், கைத்தொழிலில் கூட்டிய பெறுமதி முன்னைய ஆண்டின 17 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1996 ஆம் ஆண்டு 16.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 1996 இல் மூலப்பொருட்களுக்கான செலவில் அதிகரிப்பு ஏற்பட்டமையே காரணமாகும். கூட்டிய பெறுமதி உண்மை நியதிகளில் 7.3 சதவீதத்தால் அதிகரித்தது.

உற்பத்தி வெளியீட்டின் பெறுமதி விகிதமாகக் கூட்டிய பெறுமதி தொடர்ந்தும் 1995 ஆம் ஆண்டைப் போன்று 37.0 சதவீதமாக மாறாது காணப்பட்டது. கூட்டிய பெறுமதி விகிதமானது மரம் மற்றும் மர உற்பத்திகள் பொறுத்தவரை (57.6 சதவீதம்) உலோகமில்லாத கனிப்பொருள் உற்பத்திகளை பொறுத்தவரை

அட்டவணை **4.4**

அரச துறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்

1977 = 100

| வகை | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 13.4 | 8.1 | 9.3 | 10.2 | 9.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 27.5 | 10.3 | - | - | - |
| 3. மர, மர உற்பத்திகள் | 20.3 | 25.4 | 22.0 | 26.3 | 31.7 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 156.6 | 174.1 | 187.8 | 173.2 | 152.2 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 36.9 | 121.8 | 126.3 | 118.0 | 132.0 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 91.8 | 129.4 | 134.2 | 124.2 | 138.9 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 143.4 | 120.0 | 5.5 | 5.9 | 6.8 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 125.7 | 92.4 | 130.8 | 95.0 | 116.5 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - |
| எல்லா வகைகளும் | 73.3 | 87.9 | 83.8 | 78.0 | 86.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 52.7 | 41.7 | 27.7 | 24.5 | 25.1 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை **4.5**

கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி

| வகை | ரூ. ப. இலட்சம் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 (அ) | 1995 | 1996 (அ) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 18,668 | 21,704 | 24,373 | 29,507 | 32,891 | 21.1 | 11.5 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 14,630 | 18,994 | 20,660 | 24,859 | 31,184 | 20.3 | 25.4 |
| 3 மர, மர உற்பத்திகள் | 677 | 831 | 1,081 | 1,177 | 1,250 | 8.9 | 6.2 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 1,397 | 1,912 | 2,301 | 2,458 | 2,580 | 6.8 | 5.0 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 3,989 | 4,723 | 5,758 | 6,898 | 8,957 | 19.8 | 29.8 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 5,918 | 7,163 | 9,272 | 9,726 | 10,537 | 4.9 | 8.3 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 263 | 279 | 356 | 347 | 450 | -2.5 | 29.7 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3,629 | 3,608 | 4,344 | 4,547 | 4,809 | 4.7 | 5.8 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 1,196 | 1,532 | 1,838 | 2,319 | 2,763 | 26.2 | 19.1 |
| மொத்தம் | 50,367 | 60,746 | 69,983 | 81,838 | 95,421 | 16.9 | 16.6 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(55.5 சதவீதம்) 50 சதவீதத்துக்கு உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (51.2) சதவீதம் என்பனவற்றில் 50 சதவீதத்திற்கும் மேலாகக் காணப்பட்டது. இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்குகள் (19.1 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ( 20 சதவீதம்) புடவை அணியும் ஆடைகள் மற்றும் உற்பத்திகளைப் பொறுத்த வரை (30.6 சதவீதம்) மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலையைப் பொறுத்தவரை (48.2 சதவீதம்) என்பன குறைந்தளவு கூட்டிய பெறுமதியைப் பதிவு செய்தன.

முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில் துறையின் உற்பத்தி இயலளவு 2 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் 1995 இல் 84 சதவீதமாக இருந்த இயலளவுப் பயன்பாட்டு விகிதம் மின் வெட்டுக்காரணமாக 1996 இல் 83 சதவீதமாக சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த வீழ்ச்சி பிரதானமாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், உணவு குடிபானங்கள் மற்றும் புகையிலை மற்றும் இரசாயனப் பொருட்கள், இறப்பர் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களின் வகைகள் என்பன வற்றில் காணப்பட்டன.

## 4.4 உற்பத்திக் கிரயமும் இலாபத் தன்மையும்

மத்திய வங்கியின் அளவீட்டின் படி சராசரி தொழிற்சாலை இலாப விகிதம் (மொத்த உற்பத்திஇலாப விகிதம்) இலங்கை முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில் துறையைப் பொறுத்தவரை 1995 இல் 16.2 சதவீதமாக இருந்து 1996 இல் 14.7 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. உற்பத்திக் கிரயம் 18.2 சதவீதம் அதிகரித்ததாலும், தொழிற்சாலை உற்பத்தியின் பெறுமதியில் 16.8 சதவீதமான அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாகவும் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. 1996 இல் கூலிகள் வட்டி மற்றும் ஏனைய கிரயங்கள் அதிகரித்தன. கைத்தொழில்களுக்கிடையில் இலாபத்தன்மை 10 சதவீதத்திலிருந்து 23 சதவீதம வரை வேறுபட்டு காணப்பட்டன. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி விலை 22.9 சதவீதம் உயர் இலாப விகிதத்தைக் காட்டியது. ஆயினும் 1995 ஆம் ஆண்டு 24.2 சதவீதத்துடன் ஒப்பிடும் போது சற்றுக் குறைவானதாகும். முதலீட்டுச் சபை அல்லா கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் கிரயம்

அட்டவணை **4.6**

முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)

| வகை | உற்பத்தி செலவு (ரூ. ப. இ.) | | உற்பத்தியின் பெறுமதி (ரூ. ப. இ.) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 43,428 | 54,911 | 50,439 | 62,257 | 13.9 | 11.8 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 12,893 | 14,504 | 17,009 | 18,812 | 24.2 | 22.9 |
| 3 மர, மர உற்பத்திகள் | 1,082 | 1,163 | 1,270 | 1,391 | 14.8 | 16.4 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 2,521 | 2,713 | 3,071 | 3,262 | 17.9 | 16.8 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 6,657 | 7,362 | 7,643 | 8,216 | 12.9 | 10.4 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 8,699 | 9,356 | 10,430 | 11,494 | 16.6 | 18.6 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 803 | 1,039 | 893 | 1,161 | 10.1 | 10.5 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 5,947 | 6,477 | 7,226 | 7,674 | 17.7 | 15.6 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,565 | 2,435 | 3,004 | 2,941 | 14.6 | 17.2 |
| மொத்தம் | 84,595 | 99,960 | 100,985 | 117,208 | 16.2 | 14.7 |

(அ) 460 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை **4.7**
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)
(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)

| வகை | உள்நாட்டுச் செலவு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வலுவும் எரி பொருளும் | | கூலி | | மூலப் பொருட்கள் | | வட்டிச் செலவு | |
| | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 | 1995 | 1996 |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 2.1 | 1.9 | 11.4 | 11.8 | 45.6 | 48.0 | 1.3 | 1.9 |
| 2 புடவைகள், அணியும் தோல் உற்பத்திகள் | 5.3 | 4.7 | 16.5 | 15.4 | 10.3 | 11.2 | 2.6 | 2.6 |
| 3 மர, மர உற்பத்திகள் | 3.1 | 3.3 | 17.8 | 19.3 | 54.7 | 58.3 | 3.1 | 4.9 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 2.6 | 2.8 | 9.3 | 9.4 | 18.1 | 16.0 | 4.0 | 4.7 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் | 5.9 | 5.0 | 10.7 | 10.5 | 27.3 | 24.0 | 2.8 | 3.3 |
| 6 உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | 11.8 | 12.7 | 11.3 | 12.4 | 7.3 | 8.5 | 3.2 | 2.7 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 10.6 | 7.3 | 8.5 | 5.8 | 10.1 | 4.4 | 0.4 | 6.4 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3.0 | 3.1 | 10.8 | 11.4 | 17.1 | 17.5 | 4.7 | 5.5 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 5.6 | 5.1 | 18.1 | 20.9 | 62.6 | 60.0 | 1.4 | 1.3 |
| மொத்தம் | 4.1 | 3.8 | 12.3 | 12.4 | 32.3 | 34.3 | 2.1 | 2.6 |

(அ) 460 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பெயரளவு நியதிகளில் 25.2 சத வீதத்தால் அதிகரித்தது. ஆகக்கூடிய அதிகரிப்பு 32.8 சதவீதம் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகையால் பதிவு செய்யப்பட்டது. இதற்கான பிரதான காரணம் உள்நாட்டு மூலப்பொருட்களுக்கான உயர்ந்த விலைகளாகும். புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திப் பொருள் வகையின் உற்பத்தி கிரய வீதமாக உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு 1995 இல் 10.3 சதவீதமாக இருந்து 1996 இல் 11.2 சதவீதமாக குறைந்தளவில் அதிகரித்துள்ளது. உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகையைப் பொறுத்தவரை, இவ் விகிதாசாரம் 1995 இல் 45.6 சதவீதமாக இருந்து 1996 இல் 48.0 சதவீதமாக அதிகரித்துள்ளது.

முதலீட்டுச் சபை சாராத துறையில் பயன்படுத்தப்பட்ட வலு மற்றும் எரிபொருள் கிரயம் பெயரளவு நியதிகளில் 1996 ஆம் ஆண்டில் 8.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த உற்பத்திக் கிரயத்தில் வலு மற்றும் எரிபொருளின் கிரயம் 1995 இல் 4.1 சதவீதமாக இருந்து 1996 இல் 3.8 சத வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. உலோகமல்லாத கனிப்பொருளின் உற்பத்திப் பொருட்களின் மொத்த உற்பத்திச் செலவில் முக்கிய மூலத்தினைக் கொண்டிருந்த சக்திவலு உணவு, குடிபானங்கள் மற்றும் தேயிலை உற்பத்தி வகையில் மிகக் குறைந்த பங்கினையே கொண்டிருந்தது.

1996 இல் முதலீட்டுச் சபை சாராத தனியார் துறையின் கூலிப் பட்டியலானது பெயரளவு நியதிகளில் 19.9 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. மொத்த உற்பத்திச் செலவின் விகிதாசாரமாக மொத்தக் கூலிகளும் சம்பளங்களும் 1995 இல் 12.3 சதவீதமாக இருந்து 1996 இல் 12.4 சதவீதமாக குறைந்தளவில் அதிகரித்துள்ளது. கைத்தொழில்களில் உழைப்புப் பங்கு (மொத்த உற்பத்தியின் கூலிப்பட்டியல் பங்கினால் சராசரிப்படுத்தப்பட்டது) மரம் மற்றும் மர உற்பத்தியில் 19.3 சதவீதம் மற்றும் புடவைகள், அணியும் ஆடையில் தோல் உற்பத்தியை 15.4 சதவீதமும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகக் குறைந்த உழைப்புப் பங்கு தாள் மற்றும் தாள் உற்பத்திகள், அடிப்படை உலோக உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திர உபகரண வகைகள் என்பனவற்றில் காட்டப்பட்டுள்ளது.

முதலீட்டுச் சபை சாராத தனியர் துறையின் வட்டிச் செலவு 1996 இல் 41.5 சதவீதத்தால் அதிகரித்தது. இது உயர் கடன்படு வீதங்கள் மற்றும் இத்துறையின் மொத்தக் கடன்களின் அதிகரிப்பு என்பவற்றில் பிரதிபலிக்கிறது. மொத்த உற்பத்தி செலவின் சதவீதமாக வட்டிச் செலவு

*1995 இல் 2.1 சதவீதமாக இருந்து 1996 இல் 2.6* சதவீதமாக அதிகரித்துள்ளது. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், மரம் மற்றும் மர உற்பத்திகள் போன்ற கைத்தொழில்கள் வட்டிச் செலவுப் பங்கை 1996 இல் பதிவு செய்தன.

### கைத்தொழில் வேலைவாய்ப்பு

முதலீட்டுக் கைத்தொழில்களின் தொழில் ஈர்ப்பின் பிரதிபலிப்பினால் 1996 இல் கைத் தொழில் துறையின் வேலைவாய்ப்புக்கள் 2 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. 1996 இல் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் மேலதிகமாக 8,569 வேலைவாய்ப்புக்களை உருவாக்கியது. முதீட்டுச் சபை சாராத 460 நிறுவனங்களை உள்ளடக்கி மேற்கொள்ளப்பட்ட வருடாந்த கைத்தொழில் உற்பத்தி அளவீட்டின் படி வேலை வாய்ப்புக்கள் 1995 இல் 120,298 இல் இருந்து 1996 இல் 118,219 ஆக குறைவடைந்ததுடன் 1996 இல் வேலைவாய்ப்புக்கள் 1.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன. தாள் மற்றும் தாள் உற்பத்தி தவிர்ந்த சகல பிரதான கைத்தொழில் வகைகளிலும் வேலைவாய்ப்பு இவ்வருட காலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது. தாள் மற்றும் தாள் உற்பத்தி வகை வேலை வாய்ப்பில் 2.3 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. அடிப்படை உலோக உற்பத்திகள், உலோகமல்லாத கனிப் பொருள் இறப்பர் உற்பத்திகள் கைத்தொழில் துறை வேலைவாய்ப்பில் பெருமளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

## 4.5 முதலீடு

### வெளிநாட்டு முதலீடு

வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல் மூலம் உள்நாட்டுச் சேமிப்பின் இடைவெளியை நிரப் பலாம் என இலங்கை நம்புகிறது. புதிய தொழிநுட்ப அறிவு, முன்னேற்றகரமான வழி முறைகள் மூலம் உற்பத்தித் துறையின் அபி விருத்திக்கு இவை உதவியிருக்கின்றன. வெளி நாட்டு முதலீட்டை உயர்த்துவதற்குப் பொறுப் பான பிரதான நிறுவனமான முதலீட்டுச் சபை பேச்சு வார்த்தைகளை நடாத்தி முதலீட்டுத் திட்டங்களை அங்கீகரித்ததன் மூலம் இவ்வாண் டுக் காலப்பகுதியில் முதலீட்டுத் திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. 1996இல் இலங்கை ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் போட்டிக்கு மத்தியிலும் கணிச மானளவு வெளிநாட்டு மூலதனத்தை பிரதானமாக யப்பான், தென்கொரியா, கொங் கொங், சிங்கப்பூர், ஜேர்மனி, அவுஸ்திரேலியா,

அட்டவணை **4.8**

தனியார் துறைக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பு

எண்ணிக்கை

| | வகை | 1995 | 1996 | 1996 இன் சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| (i) | முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை (அ) | | | |
| 1 | உணவு, குடிபானங்கள், புகையிலை | 18,478 | 18,384 | -0.5 |
| 2 | புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 59,131 | 58,295 | -1.4 |
| 3 | மர மர உற்பத்திகள் | 1,322 | 1,312 | -0.8 |
| 4 | தாளும் தாள் உற்பத்திகளும் | 6,250 | 6,392 | 2.3 |
| 5 | இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் | 14,132 | 13,601 | -3.8 |
| 6 | உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,528 | 9,096 | -4.5 |
| 7 | அடிப்படை உலோக உற்பத்திகள் | 950 | 902 | -5.1 |
| 8 | உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 6,089 | 5,859 | -3.8 |
| 9 | வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 4,418 | 4,378 | -0.9 |
| | துணை மொத்தம் | 120,298 | 118,219 | -1.7 |
| (ii) | முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகள் | 233,374 | 241,970 | 3.7 |
| | மொத்தம் | 353,672 | 360,189 | 1.8 |

(அ) 460 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கை முதலீட்டுச் சபை

அட்டவணை **4.9**

முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் உண்மையான முதலீடுகள் (அ)

| வகை | தொழில் முயற்சி களின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீ டுகள் (ரூ.ப.இ.) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.ப.இ.) | |
|---|---|---|---|---|---|---|
| | 1995 | 1996 (இ) | 1995 | 1996 (இ) | 1995 | 1996 (இ) |
| 1 உணவு, குடிபானங்கள், தேயிலை | 53 | 77 | 1,290 | 2,274 | 1,974 | 4,437 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 109 | 117 | 11,064 | 12,351 | 12,821 | 15,045 |
| 3 மர மர உற்பத்திகள் | 17 | 19 | 488 | 474 | 551 | 564 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 9 | 12 | 167 | 326 | 362 | 550 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 52 | 66 | 4,945 | 5,762 | 5,633 | 6,877 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 39 | 42 | 774 | 972 | 2,345 | 2,783 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 19 | 20 | 615 | 605 | 978 | 1,180 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 91 | 102 | 2,919 | 3,499 | 4,068 | 4,647 |
| 9 பணிகள் | 217 | 255 | 28,108 | 34,694 | 43,487 | 55,539 |
| மொத்தம் | 606 | 710 | 50,370 | 60,957 | 72,219 | 91,622 |

(அ) ஆண்டு முடிவில் உள்ளவாறு.

(ஆ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்

(இ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

அட்டவணை **4.10**

முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்

| வகை | தொழில் நிலை(எண்) (திசெ. முடிவில்) | | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (ரூ.ப.இ.) (க.ஏ.பெ.) | |
|---|---|---|---|---|
| | 1995 | 1996 (அ) | 1995 | 1996 (அ) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 8,166 | 6,931 | 3,963 | 4,857 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 153,664 | 156,391 | 73,287 | 82,050 |
| 3 மர மர உற்பத்திகள் | 2,500 | 2,449 | 293 | 342 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 519 | 733 | 574 | 857 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 19,047 | 20,509 | 12,217 | 15,083 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 9,160 | 9,226 | 6,155 | 7,068 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,252 | 1,399 | 722 | 1,132 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 23,734 | 26,645 | 9,151 | 12,822 |
| 9 பணிகள் (ஆ) | 15,332 | 17,687 | 7,001 | 9,272 |
| மொத்தம் | 233,374 | 241,970 | 113,363 | 133,483 |

(அ) தற்கலிகமானவை.

(ஆ) வரையறுக்கப்பட்ட ஏயர்லங்கா நீங்கலாக.

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை

இத்தாலி, இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து வரக்கூடியதாக இருந்தது. முதலீட்டுச் சபை கைத்தொழில்களால் பெறப்பட்ட முதலீடுகள் 1995ம் ஆண்டின் 46 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும் போது 1996இல் 56 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன.

பிரிவு 17இன் கீழ் முதலீட்டுச் சபை 1995இல் ஒப்புதல் வழங்கிய ரூபா 321,000 இலட்சம் முதலீட்டுக் கடப்பாடுகளைக் கொண்ட 220 செயற் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,526,000 இலட்சம் முதலீட்டுப் பொறுப்புக்களைக் கொண்ட 254 செயற்திட்டங்களுக்கு ஒப்புதலளித் தமையின் மூலம் 1996ம் ஆண்டு இறுதிவரை ஒப்புதலளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1953 ஆகியது. இது ரூ 3,940,000 மில்லியன் முதலீட்டுக் கடப்பாடுகளுடன் கூடிய மூன்று பெற்றோலியம் செய்முறைப்படுத்தும் பொறித்தொகுதிகளை உள்ளடக்கியுள்ளது. 1996இல் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளில் வெளி நாட்டுக்கூறு ரூபா 4,288,000 இலட்சம் அல்லது இவ்வாண்டு காலப்பகுதியில் ஒப்புதலளிக்கப்

**வரைபடம் 4.4**
**முதலீட்டுச்சபையின் உடன்படிக்கை செய்யப்பட்ட மற்றும் பெறப்பட்ட முதலீடுகள்**




பட்ட மொத்த முதலீட்டில் 95 சதவீதமாக இருந்தது. இதில் உயர் வெளிநாட்டுக் கூறானது மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு செயற்றிட்டங்களின் உயர் வெளிநாட்டு மூலதன கடப்பாடுகளைப் பிரதிபலித்தது. 1996ம் ஆண்டு இறுதிவரை ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட செயற்றிட்டங்கள் 1277 ஆகும். இவைகளில் 864 தொழில் முயற்சிகள் அடங்கும். இது 200 ஆடைத்தொழிற்சாலை செயற்றிட்டங்களின் கீழ் வரும் 154 செயற்றிட்டங்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தொழில் முயற்சிகளில் 1996ம் ஆண்டு இறுதிவரை ரூ. 970,000 இலட்சம் முதலிடப்பட்டிருக்கிறது. இம்முதலீடுகளில் வெளிநாட்டுக்கூறு ரூபா 630,000 இலட்சம் அல்லது மொத்த முதலீட்டில் 65 சதவீதமாக இருந்தது. இம்முதலீடுகளின் பிரதான கைத்தொழில் வகைகளாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் இரசாயன பொருட்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக் பொருட்கள், உணவு குடிபானங்களும் புகையிலையும் மற்றும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத பொருட்களையும் உள்ளடக்கியுள்ளது.

உள்நாட்டு இறைவரி மற்றும் வரி தொடர்பான சட்டங்களின்கீழ் (சாதாரண சட்டங்கள்) இலங்கை முதலீட்டுச் சபை 1995இல் ஒப்புதலளித்த 62 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1996இல் 85 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்துள்ளது. இச்செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 46,000 இலட்சமாகும். இதில் வெளிநாட்டுக் கூறு ரூ. 34,000 இலட்சம் அல்லது 74 சதவீதமாகும்.

200 ஆடைத்தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தை உள்ளடக்கியதாக முதலீட்டுச் சபையின் மொத்த தொழில் வாய்ப்பு அளவு 241,970 ஆகும். 1995ஆம் ஆண்டு 13 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 1996இல் இது 4 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது.

### உள்நாட்டு முதலீடுகள்

முதலீட்டுச்சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் கணிசமானளவு உள்நாட்டு முதலீடுகள் காணப்பட்டன. ஆயினும் மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு செயற்றிட்டங்களின் உயர் வெளிநாட்டு மூலதனக்கூறு காரணமாக உள்நாட்டு முதலீடுகளின் பங்கு 1995இன் 57 சதவீதத்தில் இருந்தது. 1996 இல் 5 சதவீதத்திற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தது. இதன் பயனாக 1996இல் ரூபா 4,526,000 இலட்சம் முதலீட்டுக் கடப்பாட்டில் ரூபா 238,000 இலட்சம் மட்டுமே உள்நாட்டு மூலதனங்களிலிருந்து உருவாக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. முதலீட்டுச் சபையின் கீழ் தொழிற்படும் 864 செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டின் பங்கு மொத்த முதலீட்டில் ரூபா 342,000 இலட்சம் அல்லது 35 சதவீதமாக 1996 ஆண்டு இறுதி அன்று இருந்தது. இம்முதலீடுகள் முக்கியமாக சிறுவர்களுக்கான மென் விளையாட்டுப் பொருட்கள், நகைகள், பின்னப்பட்ட துணிகள், நூல் மற்றும் புடவைகள், மர கலைப் பணிப்பொருட்கள், பழவகை, காய்கறிகள் பதனிடல், சமையலறைப் பாவனைப்பொருட்கள் தொலைத்தொடர்பு உபகரணங்கள், ஆடை துணைப்பொருட்கள் என்பவற்றின் மீது இருந்தது. மேலும் பொது ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் முதலீட்டுச் சபை செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீட்டுக் கூறு ரூபா 12,000 இலட்சம் அல்லது மொத்த முதலீட்டில் 26 சதவீதமாக இருந்தது.

அதேநேரம் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1637 தொழில் முயற்சிகளின் மொத்த முதலீடு 1996ம் ஆண்டு முடிவில் ரூபா 6,186,000 இலட்சமாக இருந்தது. இம்முதலீடுகள் புடவைகள், ஆடைகள், தோல் உற்பத்திகள், இரசாயனப்பொருட்கள், பெற்றோலியம், இறப்பரும் பிளாத்திக் உற்பத்திகளும், உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானங்கள் புகையிலை

போன்ற வகைகளில் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இங்கு தொழில் முயற்சிகள் 301,450 பேருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியுள்ளதுடன் 1995ம் ஆண்டு 300,036 பேருடன் ஒப்பிடும்போது சிறிதளவான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

## 4.6 கைத்தொழில் துறையில் காணப் படும் கடன் கிடைப்பனவுகள்

1996 இல் இரு பிரதான அபிவிருத்தி வங்கிகளும், வர்த்தக வங்கிகளும் கைத்தொழில் துறைக்கு மீள்நிதியிடல், ஒப்புதல்கள், நேரடிக் கடன்கள், மூலதனப்பங்களிப்பு போன்றன வாயிலாக நிதி உதவி வழங்கி வந்தன. தேசிய அபிவிருத்தி வங்கியும், இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனமும் 1995ம் ஆண்டு ஒப்புதலளித்த 2764 செயற்றிட்டங்களினதும் ரூபா 118,550 இலட்ச முதலீட்டுச் செலவுகளுடன் ஒப்பிடும்போது 1996இல் மொத்தமாக 1693 செயற்றிட்டங்களுக்கும் ரூபா 108,450 இலட்சம் கடன் செலவுகளுக்கும் ஒப்புதலளித்தன. இது 1996ம் ஆண்டு நிலவிய வரட்சி, மின்வெட்டின் மத்தியிலும் கைத்தொழில் துறையில் மேலும் முதலீட்டு வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. வர்த்தக வங்கிகளினூடாக கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதி வசதிகள் துரிதமான வளர்ச்சியைக் காட்டியதுடன் 1995ஆம் ஆண்டு முதல் ஒன்பது மாதங்களின் 25 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது கைத்தொழில் துறைக்கான வங்கிக் கடன்கள் 16 சதவீதத்தால் வளர்ந்துள்ளன.

சர்வதேச அபிவிருத்தி அமைப்பும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் கூட்டாக நிதி உதவி அளிக்கும் சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டம் IV இன் (சிறிய நடுத்தர கைத்தொழில் IV) கீழ் தேசிய அபிவிருத்தி வங்கியானது 1141 செயற்றிட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்காக ரூபா 7,940 இலட்சத்தினை மீள் நிதியிடலாக வழங்கியுள்ளது. 1995ம் ஆண்டு தேசிய அபிவிருத்தி

அட்டவணை **4.11**

தேசிய அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் – 1996 (அ)

| வகை | தே. அ. வ. | | | | | | | | இ.அ.நி.கூ. | | | | | | முழு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் சி.ந.கை. செயற் றிட்டம் IV | | நேரடி நிதியியல் உதவி | | பங்கு மூலதன | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | | |
| | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) | என் | தொகை (ரூ.ப.இ.) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 197 | 125 | 24 | 1,126 | 1 | 100 | 222 | 1,350 | 106 | 542 | - | - | 106 | 542 | 328 | 1,892 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 46 | 38 | 25 | 283 | 3 | 59 | 74 | 381 | 44 | 194 | - | - | 44 | 194 | 118 | 575 |
| 3 மர, மர உற்பத்திகள் | 63 | 26 | 11 | 23 | 4 | 104 | 78 | 153 | 27 | 73 | - | - | 27 | 73 | 105 | 226 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 21 | 27 | 2 | 10 | - | - | 23 | 37 | 21 | 123 | - | - | 21 | 123 | 44 | 160 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 37 | 49 | 38 | 1,388 | 1 | 20 | 38 | 1,388 | 47 | 250 | - | 8 | 47 | 258 | 85 | 1,646 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 63 | 39 | - | - | - | - | 63 | 39 | 20 | 216 | - | - | 20 | 216 | 83 | 255 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 69 | 36 | 9 | 210 | - | - | 78 | 247 | 4 | 7 | - | - | 4 | 7 | 82 | 254 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - | - | - | - | 68 | 643 | 1 | 20 | 69 | 663 | 69 | 663 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 645 | 453 | 131 | 4,361 | 3 | 359 | 779 | 5,173 | - | - | - | - | 0 | 0 | 779 | 5,173 |
| மொத்தம் | 1,141 | 793 | 240 | 7,401 | 12 | 642 | 1,355 | 8,768 | 337 | 2,048 | 1 | 28 | 338 | 2,076 | 1,693 | 10,844 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்
தேசிய அபிவிருத்தி வங்கி

வங்கியில் ஒப்புதலளிக்கப்பட்ட 431 செயற்றிட்டங்களுடனும் ரூபா 65,190 இலட்சம் கொண்ட தொகையுடனும் ஒப்பிடும்போது இவ்வருடத்தில் 240 செயற்றிட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் ரூபா 74,010 இலட்சம் நேரடி நிதி உதவியாக செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அபிவிருத்தி வங்கி 1995 இல் மூலதனப் பங்களிப்புச் செய்த 10 செயற்றிட்டங்களுடனும் ரூபா 4,770 இலட்சம் மூலதன பங்களிப்புடனும் ஒப்பிடும்போது இவ்வருட காலத்தில் 12 செயற்றிட்டங்களுக்கு ரூபா 6,430 இலட்சம் பெறுமதியான மூலதனத்தை வழங்கியுள்ளது. இந்த வசதிகளின் மூலம் இரசாயனப்பொருட்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள், உணவு, குடிபானமும் புகையிலையும், புடவைகள் அணியும் ஆடைகளும் தோல் பொருட்களும் ஆகிய கைத்தொழில் வகைகள் பயனடைந்துள்ளன.

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால் 1995ம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட 480 செயற்றிட்டங்களுடனும் செலவிடப்பட்ட ரூ. 34,240 இலட்சங்களுடன் ஒப்பிடும்போது 1996ம் ஆண்டில் 338 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன் ரூ. 20,760 இலட்சம் கடனாக செலவிடப்பட்டுள்ளது. இந்த வசதிகளில் பெரும்பகுதியைப் பெற்ற கைத்தொழில் வகைகளாக உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், இயந்திரங்கள் போக்குவரத்து உபகரணங்கள் உணவு, குடிவகைகள், புகையிலை, இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக் உற்பத்திகள், உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் போன்றன காணப்படுகின்றன.

## 4.7 கைத்தொழில் கொள்கை

அரச பிரமாணங்களையும், கட்டுப்பாடுகளையும் குறைவாக வைத்திருக்கக்கூடிய வகையில் அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்தி உபாயங்கள் வரையப்பட்டுள்ள அதேவேளை புதிய கைத் தொழில்கள் மற்றும் முதலீடுகளுக்கு தேவையான இறை மற்றும் நிதி ஊக்குவிப்புக்களும் வழங்கப்படுகின்றன. அரச கைத்தொழில் கொள்கையின் முதன்மைக் குறிக்கோள் பன்முகப் படுத்தலை ஊக்குவித்தல், கைத்தொழில் தளத்தை உயர்த்துதலும், விஸ்தரித்தலும் பௌதீக முகாமைத்துவம் மற்றும் மனித வளங்களின், திறமையை முன்னேற்றுதல், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், ஊழியர்களின் வருமான மட்டத்தைக் கூட்டுதல், ஏற்றுமதியை ஊக்குவித்தல், பிரதேசரீதியாக கைத்தொழில் பரம்பலை ஊக்குவித்தல் போன்றனவாகும்.

கைத்தொழில் துறைக்கு இறை ஊக்குவிப்புக்களை வழங்கியதைத் தவிர முன்னேற்றகரமான தொழில் நுட்பத்தில் முதலிட்டதுடன் 1996இல் அரசாங்கம் பலதரப்பட்ட குறிப்பிட்ட செயற்றிட்டங்கள் மீது நன்கொடை உதவிகளுடன் உள்ளூர் தொழில்நுட்ப செயற்பாடுகளை முன்னேற்றியதுடன் ஏற்றுமதி மேம்படுத்தலையும் உற்பத்தி முன்னேற்றத்தையும் தொடர்ந்து செயற்படுத்தி வந்தது. மேலும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவராண்மையின் உதவியுடன் செயற்படுத்தப்படும் தனியார்துறை செயற்றிட்டங்களுக்கான தொழில்நுட்ப அறிமுகக் கட்டமானது சிறிய நடுத்தரக் கைத்தொழில் துறையை அபிவிருத்தி செய்தல், மற்றும் சுற்றாடல் நன்மையுடன் ஒத்துச் செல்லக் கூடிய தொழில் நுட்பங்களைச் சிறப்பாக வலியுறுத்தும் விதத்தில் மூலங்கள் மற்றும் தொழில் நுட்பங்களைக் கையேற்றல் என்பன முகாமைத்துவ தொழில் நுட்பங்கள் என்பவற்றை அடையாளம் காண்பதில் நிறுவனங்களுக்கு உதவும் கடப்பாடுகளை மேலதிகமாக மேற்கொள்ளும் பொருட்டு 1995ம் ஆண்டிலிருந்து 5 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்ட கைத்தொழில் தொழில்நுட்ப சந்தை தகவல் வலையமைப்பு சரியான நேரத்தில் தகவல்களைப் பெற தொடர்ந்தும் உதவுகிறது. ஜேர்மன் அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட விவசாய இயந்திரவியல் செயற்திட்டமானது விவசாய செய்முறைப் படுத்தலையும், அதனோடு தொடர்புடைய தொழில்நுட்பங்களையும் முன்னேற்றுவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் ஜேர்மன் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 1995ம் ஆண்டில் அமைக்கப்பட்ட தனியார் துறை நிகழ்ச்சித் திட்டம் 1996 இலும் தொடர்ந்து செயற்பட்டது. இத்திட்டமானது தனியார் துறை நிறுவனங்கள் தமது ஏற்றுமதி சார்ந்த உள்ளார்ந்த வளங்களை முன்னேற்றுவதற்காக தர அபிவிருத்தி, முகாமைத்துவ மற்றும் சந்தைப் படுத்தும் திறன்கள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குகிறது. மேலும் இந்தச்

செயற்றிட்டமானது ஜேர்மன் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கூட்டு முயற்சிகளில் நிறுவனங்கள் ஈடுபட்டு இறப்பர், பாதணிகள், மரத்தினால் செய்யப்பட்ட விளையாட்டுப் பொருட்கள் அத்தியாவசிய எண்ணெய்கள் மற்றும் உணவு கலவைப் பொருட்கள் போன்ற தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் தனியார் துறையினர் சர்வதேச போட்டிகளை முன்னேற்றுவதற்காக உதவுகிறது.

1996 இல் நியமிக்கப்பட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான ஜனாதிபதி பணி குழு கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களின் சந்தைச் சார்புகளை முன்னேற்றுவதற்கான குறிக் கோளுக்காக பல சிபார்சுகளை முன்வைத் துள்ளது. இச்சிபார்சுகளில் சந்தைக் கேள்விகளை பெரிதும் நிறைவேற்றுமுகமாக விஞ்ஞான தொழில் நுட்ப நிறுவனங்கள் கைத்தொழில் ஆய்வுகூடங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவைகளை புதுப்பிக்கவும், மறுசீரமைக்கவும் பாரிய முக்கி யத்துவமளிக்கப்பட்டுள்ளது.

சந்தைத்தன்மையுடன் ஒத்துச்செல்லக்கூடிய விதத்தில் கைத்தொழில்துறையை அபிவிருத்தி செய்யுமுகமாகவும், கடுமையான தீர்வைப் பாதுகாப்பின் கீழ் அபிவிருத்தியடைந்த கைத் தொழில் வளர்ச்சி நீரோட்டத்துக்கு உற்பத்திக் கைத்தொழில்களைக் கொண்டு வருவதற்கும் மூன்று கட்ட தீர்வை முறைக்கு அப்பால் ஒருமுகப்படுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வையாக 15 சதவீதத்தை விரைவில் செயற்படுத்தலாமென அரசு எதிர்பார்க்கிறது. 1997ம் ஆண்டு இறுதி யளவில் செற்பாட்டிற்கு வரும் பொருட்கள் பணிகள் மீதான உத்தேசிக்கப்பட்ட வரியானது கைத்தொழில் துறையின் பாதகமான விளைவு களை நீக்குவதற்கு உதவுமென எதிர் பார்க்கப் படுகிறது.

மின்வெட்டுக்காரணமாக கைத்தொழில் வெளியீட்டில் ஏற்படக்கூடிய இழப்புக்களை குறைக்கு முகமாக அரசாங்கம் 1996ம் ஆண்டின் முதல் அரைப்பகுதியில் பல நடவடிக்கைகளை எடுத்தது. நிறுவனங்கள் தமது சொந்த மின் உருவாக்கிகளை பயன்படுத்த ஊக்குவிக்கப் பட்டதுடன் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு பல நிவாரண நடவடிக்கைகள் வழங்கப்பட்டன. இந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் மின் உருவாக்கிகளை தீர்வையின்றி இறக்குமதி செய்தமை, பாரிய மின் உருவாக்கிகளை 40 சதவீத மானியத்தில் இறக்குமதி செய்தமை, தனியார் துறையின் மேலதிக மின் உருவாக்கிகளை உத்தரவாத மிகை விலைகளில் கொள்வனவு செய்தமை, 100 கேவிஏ க்கு மேற்பட்ட மின் உருவாக்கிகளைக் கொள்வனவு செய்ய இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், மற்றும் தேசிய அபிவிருத்தி வங்கி மூலம் சலுகை அடிப்படை யிலான கடன் வசதிகளை செய்து கொடுத்தமை, மற்றும் சலுகை மின்சார கட்டண வசதி செய்தமை போன்றன அடங்கும். மேலும் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களின் கடன்களை ஒன்றன்பின் ஒன்றாக மீள் அட்டவணைப்படுத்தவும், மீதியாக வுள்ள கடன்கள் மீதான வரிகளைத் தளர்த்தவும் வர்த்தக வங்கிகளும் உதவி செய்தன.

## கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

உயர்தர தொழில்நுட்பம் மற்றும் திறமை யான முகாமைத்துவ பயன்பாடுகள் நவீன கைத் தொழில் துறையின் அத்தியாவசிய கூறுகளாக இனங்காணப்பட்டுள்ளன. 1996ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட பிரேரணையில் அரசாங்கம் ஏற்கனவேயுள்ள கைத்தொழில்கள் மீதும் புதிய கைத்தொழில்கள் மீதும் நவீன தொழில் நுட்பத்தில் முதலீடுகளை ஊக்குவிக்க பல சாதகமான நடவடிக்கைகளை அறிமுகம் செய்தது. இந்த ஊக்குவிப்புக்களின் நீடிப்பு பெருமளவான சிறிய நடுத்தர கைத்தொழில் அலகுகளை உள்ளடக்கிய தாக 1997ம் ஆண்டு வரவு செலவுத்திட்டப் பிரேரணையில் முன்வைக்கப்பட்டது. இந்த ஊக்குவிப்பு பொதியின் கீழ் சிறிய நடுத்தரக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டின் பருமன் மீதான கீழ் எல்லை குறைக்கப்பட்டது. இந்தப் பிரேரணையின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட இயந்திரங்கள், உபகரணங் கள், தீர்வையற்ற இறக்குமதி தொடர்பான ஊக்குவிப்பு திட்டத்தில் ரூ. 100 இலட்சங்களுக்கு மேலாக இருக்க வேண்டிய புதிய கம்பனிகளின் முதலீடுகள் ரூ. 40 இலட்சமாகவும் ரூபா 25 இலட்சங்களுக்கு மேல் இருக்க வேண்டிய ஏற்கன வேயுள்ள கம்பனிகளின் முதலீடுகள் ரூ. 10 இலட்சமாகவும் குறைக்கப்பட்டன. ஏற்கனவே யுள்ள தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை உயர்தர தொழில்நுட்பத்தினை அதிகரிப்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஒரு

அட்டவணை **4.12**
உயர்தொழில் நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள் 1996 (அ)

| வகை | புதிய | | | நடைமுறையிலுள்ள | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | முதலீடு ரூ.ப.இ. | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.ப.இ. | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.ப.இ. | உள்ளார்ந்த தொழில் நிலை |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 10 | 2,074 | 760 | 22 | 3,900 | 1,239 | 32 | 5,974 | 1,999 |
| 2 புடவைகள், அணியும்ஆடைகள் தோல் உற்பத்தி | 14 | 690 | 1,007 | 21 | 334 | 1,227 | 35 | 1,024 | 2,234 |
| 3 மர மர உற்பத்திகள் | 1 | 61 | 90 | 4 | 216 | 292 | 5 | 277 | 382 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 5 | 174 | 181 | 15 | 945 | 737 | 20 | 1,119 | 918 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 18 | 918 | 1,345 | 61 | 4,002 | 3,333 | 79 | 4,920 | 4,678 |
| 6 உலோமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 2 | 245 | 248 | 9 | 1,409 | 614 | 11 | 1,654 | 862 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 3 | 479 | 502 | 6 | 425 | 482 | 9 | 904 | 984 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 6 | 411 | 382 | 33 | 1,724 | 1,423 | 39 | 2,135 | 1,805 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்புகள் | 11 | 1,533 | 412 | 15 | 440 | 1,751 | 26 | 1,973 | 2,163 |
| 10 பணிகள் | 6 | 467 | 369 | 12 | 2,871 | 953 | 18 | 3,338 | 1,322 |
| மொத்தம் | 76 | 7,052 | 5,296 | 198 | 16,266 | 12,051 | 274 | 23,318 | 17,347 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

வருடத்திற்குள் ரூ. 40 இலட்சத்துக்கு மேல் முதலிடும் மற்றும் தொழில் விரிவாக்கத்தை ஆரம்பித்து 6 மாதங்களுக்குள் குறைந்தது 50 தொழிலாளர்களும் இருப்பின் தொழில் முயற்சியானது இயந்திரங்கள் இறக்குமதிகளுக்கு விற்பனை மற்றும் இறக்குமதித் தீர்வைச் சலுகைகளையும், புதிய தொழிற்பாட்டை ஆரம்பித்து 5 வருடங்களுக்கு இலாப அதிகரிப்புக்கள் மீது வரி விலக்கினையும் பெறுவதற்கு தகுதியுடையன வாகும். இந்த ஊக்குவிப்புக்கள் விவசாயத்தை மையமாகக் கொண்ட கைத்தொழில்கள், கால் நடை, மீன்பிடி, சுற்றுலா, சன சமூக அபிவிருத்தி உள்ளடங்கிய கைத்தொழில்களுக்கும் சேவைகளுக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

இந்த திட்டத்தின் கீழ் 76 புதிய தொழில் முயற்சிகள் ரூபா 70,520 இலட்சம் பெறுமதியான முதலீட்டுடன் 1996ம் ஆண்டு முடிவுக்குள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தன. இத்திட்டங்களின் மூலம் நேரடி வேலைவாய்ப்பு உள்ளார்ந்த வளம் 5296 பேராக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. அதே நேரம் 1996ம் ஆண்டு முடிவுக்குள் ஏற்கனவேயுள்ள தொழில் முயற்சிகளில் 198 செயற்றிட்டங்கள் ரூபா 163,000 இலட்சம் பெறுமதியான முதலீட்டுடன் இத்திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டிருந்தது. இந்த தொழில் முயற்சிகள் 12051 புதிய வேலை வாய்ப்பு உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருந்தது. மேலும் இந்த செயற்றிட்டங்களில் மறைமுக வேலைவாய்ப்பு உள்ளார்ந்த வளம் கிட்டத்தட்ட 42,000 ஆட்களாக இருக்குமென கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மதிப்பிட்டுள்ளது. இங்கு ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டத்தின் முக்கிய அம்சம் என்னவெனில் ஒப்பீட்டு ரீதியில் புடவைகள், ஆடைகள் போன்ற பாரம்பரிய கைத்தொழில்களை விட உணவு, குடிபானம், இரசாயனம், இறப்பரும் பிளாத்திக் பொருட்களும், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் போன்ற பாரம்பரியமற்ற கைத்தொழில்களில் பெரும் தொகையான முதலீடுகள் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன. இந்த திட்டத்தின் கீழ் 1996ம் ஆண்டு திசெம்பர் இறுதியில் 120 செயற்றிட்டங்கள் ரூபா 36,000 இலட்சம் பெறுமதியான இயந்திரங்கள் உபகரணங்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட நடைமுறையிலுள்ள ஊக்குவிப்புக்களைப் பொறுத்தவரை 1997ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சிறிய நடுத்தரக் கைத்தொழில்களையும் உள்ளடக்கும் விதத்தில் இவ்வூக்குவிப்புக்கள் விஃரிவாக்கப்பட்டுள்ளன. சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் சிறிய நடுத்தர கைத்தொழில் கடன் திட்டத்தில் பங்கு கொள்வதை அதிகரிக்கவும் அவற்றின் சருவதேச போட்டிகளை முன்னேற்றவும் இந்த நீடிப்பு மேற்கொள்ளப்பட்டது. இப்பிரேரணையின் கீழ்

தற்போது தமது உற்பத்தியில் 90 சதவீதத்தை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளர்களுக்கு மூலதன மற்றும் இடைநிலைப் பொருட்களின் மீது100 சதவீதம் தீர்வை மற்றும் வரிவிலக்கு மாற்றிய மைக்கப்படவிருக்கிறது. இதன்படி தமது உற்பத்தியில் 50 சதவீதத்தை ஏற்றுமதி செய்யும் ஏற்றுமதியாளருக்கு 100 சதவீத வரிவிலக்கும், உற்பத்தியில் 25 – 50 சதவீதம் வரை ஏற்றுமதி செய்வோருக்கு 50 சதவீத வரி விலக்கும் அளிக்கப்படும். புதிய முதலீட்டாளர்களைக் கவரவும் உயர் தொழில் நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறாத ஏற்கனவேயுள்ள முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும் 1998ம் ஆண்டு மார்ச் மாதம் அல்லது அதற்கு முன் புதிய பொறித் தொகுதி, இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யும் தனியார், பங்குடமை அல்லது கம்பனிக்கு வரி மதிப்பீட்டு ஆண்டின் 50 சதவீதமான வரிமதிப்பீட்டு வருமானத்தின் மேல் எல்லை மீது முன்கொண்டு வரப்பட்ட வசதியுடன் அரசு 75 சதவீதம் வரை வரி நிவாரணம் வழங்கியது. குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூ. 2,500 இலட்சத்துக்கு மேல் அல்லது குறித்துரைக்கப்பட்ட கஷ்டப் பிரதேசங்களில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு வரிமதிப்பீட்டு வருமானத்தின் 75 சதவீத மேல் எல்லை மீது 100சத வீதம் வரி நிவாரணம் அளிக்கப்பட்டிருந்தது.

கைத்தொழில் துறைக்கு மேலும் ஊக்குவிப்புக்களை வழங்கும் பொருட்டு தற்போதைய பொறிகள், இயந்திரங்கள் உபகரணங்கள் மீதான 33 1/3 சதவீதம் பெறுமானத்தேய்வானது முதலீட்டாளர்கள் இவற்றின் மொத்தக் கிரயத்தை 2 வருடங்களுக்குள் தள்ளுபடி செய்வதற்கு உதவுமுகமாக 50 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் உபகரணங்கள் மீதான தேசிய பாதுகாப்பு வரி 4.5 சதவீதமாக இருந்து 1996ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட பிரேரணைகளில் 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. முதலீட்டுக்கான செலவைக் குறைக்குமுகமாக இந்த தேசிய பாதுகாப்பு வரியானது மேலும் 0.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளைப் போன்று முதலீட்டுச் சபை சாராத ஏற்றுமதியாளர்களும் அவர்கள் நிதி வசதிகளால் சிறந்த முறையில் பயன்பெறுவதற்காக வெளிநாட்டு நாணயங்களை கடனாகப் பெற அனுதிக்கப்பட்டார்கள்.

முதலீட்டுச் சபை தொழில் துறையில் ஏற்கனவேயுள்ள சலுகைகளுக்கு மேல் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தல், இயந்திர உபகரணங்களில் குறைந்தது ரூ. 500 இலட்சத்துக்கு மேல் முதலிடுதல், 50 பேருக்கு மேல் ஊழியர்களை வேலைக்கு அமர்த்துதல் ஆகிய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கு 1996ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் 5 வருட வரி விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளன. உள்ளகக் கட்டமைப்பை உள்ளடங்கிய பாரியளவான அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவற்றின் முதலீட்டின் அளவையும், வேலை வாய்ப்பு உருவாக்கத்தையும் பொறுத்து 10 இலிருந்து 20 வருடங்கள் வரி விலக்களிப்பு வழங்கப்பட்டது. இக்கம்பனிகள் செலவாணிக் கட்டுப்பாடுகள், இறக்குமதி/ ஏற்றுமதி கட்டுப்பாடுகள் பங்கு மாற்றங்களினால் எழும் மூலதன இலாபம் மீதான வருமானவரி என்பவைகள் தொடர்பாக விலக்களிக்கப்பட்டுள்ளன. இந்த வகையின் கீழ் வரும் ஏற்றுமதி நோக்கிய செயற்றிட்டங்கள் செயற்றிட்டத்தோடு தொடர்புடைய இயந்திரங்கள் உபகரணங்கள், மூலப்பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டன. இந்த செயற்றிட்டங்களுக்கு இறக்குமதி தீர்வை, விற்பனை வரி மற்றும் உற்பத்தி வரி என்பன வாழ்நாள் முழுவதும் அறவிடப்படமாட்டாது.

## கைத்தொழில் ஊழியர்களின் உற்பத்தித் திறன்

தொழில் கொள்வோர் வேலை மட்டங்களை ஆகக்கூடிய அளவில் பேணிய போதிலும் மின் வெட்டுக் காரணமாக உற்பத்தித் தடை ஏற்பட்டதால், முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில்களில் ஊழியர் உற்பத்தித் திறன் பயன்படுத்தப்பட்ட ஒரு மனித மணித்தியாலத்துக்கான உண்மைக் கூட்டிய பெறுமதி 1996இல் 1.1 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. அதேவேளை முதலீட்டுச் சபை சாராத கைத்தொழில்களில் ஊழியர்களின் எண்ணிக்கை 1.7 சதவீதத்தால் மட்டும் குறைவடைந்திருந்த போதிலும் இங்கு உண்மைக் கூட்டிய பெறுமதியானது 1995இல் 10.2 சதவீதமாக இருந்து 7.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்ததன் விளைவாக ஊழியர் உற்பத்தித் திறனில் குறைவு ஏற்பட்டது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இலாபக்குறைவுக்கும் ஊழியர் உற்பத்தித் திறன் வீழ்ச்சிக்குமிடையில் சாதகமான

அட்டவணை **4.13**

முதலீட்டுச் சபை அல்லா தனியார் துறையில் உழைப்பாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)

1995=100

| வகை | மனித மணித்தியாலத்துக்கு கூட்டிய பெறுமதி | | 1996 இல் உற்பத்தித் திறன் (ஆ) | |
|---|---|---|---|---|
| | 1995 | 1996 (ஆ) | % மாற்றம் | சுட்டெண (1995 =100) |
| 1 உணவு, குடிபானங்கள், புகையிலை | 342.8 | 356.6 | 4.0 | 104.0 |
| 2 புடவைகள், அணியும் ஆடைகள் தோல் உற்பத்தி | 56.4 | 55.8 | -1.1 | 98.9 |
| 3 மர மர உற்பத்திகள் | 56.5 | 58.6 | 3.7 | 103.7 |
| 4 தாளும் தாள் உற்பத்திகளும் | 154.6 | 152.6 | -1.3 | 98.7 |
| 5 இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 123.6 | 130.0 | 5.2 | 105.2 |
| 6 உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 72.9 | 76.1 | 4.4 | 104.4 |
| 7 அடிப்படை உலோக உற்பத்திகள் | 139.5 | 145.5 | 4.3 | 104.3 |
| 8 உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 100.5 | 97.5 | -3.0 | 97.0 |
| 9 வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை | 57.5 | 59.9 | 4.2 | 104.2 |
| மொத்தம் | 99.7 | 98.6 | -1.1 | 98.9 |

(அ) 460 முதலீடுச்சபை அல்லா தனியார் துறை நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையில்

(ஆ) தற்காலிகமானவை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

உறவு காணப்பட்டது. ஊழியர் உற்பத்தித்திறன் முன்னேற்றமானது கைத்தொழில்களுக்கிடையில் வேறுபட்ட சூழ்நிலையைக் காட்டுகிறது. அதாவது உணவு குடிபானம் புகையிலை (4 சதவீதம்) மரமும் மரஉற்பத்தியும் (3.7 சதவீதம்) இராசயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக் உற்பத்திகள் (5.2 சதவீதம்) அடிப்படை உலோக உற்பத்திகள் (4.3 சதவீதம்) மற்றும் உலோகமல்லாத உற்பத்திகள் (4.4 சதவீதம்) ஆகும். ஊழியர் உற்பத்தித் திறன் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகளில் (1.1 சதவீதம்) உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளில் (3 சதவீதம்) வீழ்ச்சியைக் காட்டுகிறது.

உற்பத்தித் திறன் திறமையான வேலைப் பயன்பாடு காரணமாகவும் தொழில் நுட்ப முன்னேற்றம் காரணமாகவும் அதிகரிக்கிறது. உற்பத்தித் திறன் முன்னேற்றத்தின் அவசரத் தேவையும் உற்பத்தித் திறனின் பாரிய முன்னேற்றமும் குறுகிய காலத்திற்குள் அடைய முடியாது என இனங்காணப்பட்டுள்ளது. இதனால் தான் "உற்பத்தித் திறன் தசாப்தம்" 1997-2006 அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாவது வருடத்தில் உற்பத்தித்திறனில் அவசரத் தேவையை அதிகரிப்பதற்காக கல்வி அறிவுடைய உற்பத்தியாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொது மக்களுக்கு உற்பத்தித் திறன் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட விருக்கிறது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாளரான கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு உற்பத்தித்திறன் கொள்கையை விருத்தி செய்யு முகமாகவும் இதன் செயற்பாட்டையும் பயன் பாட்டையும் எடுத்துக்காட்டும் முகமாகவும் தொடர்பு சாதன அதிகாரிகள் வியாபார தலைவர்கள் தொழில் முயற்சிகளின் நிறைவேற்று அதிகாரிகள், தொழிற் சங்கத் தலைவர்கள் அரச சார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பலதரப் பட்ட கருத்தரங்குகள் செயலமர்வுகள் கூட்டங்கள் விரிவுரை நிகழ்ச்சிகள் என்பவற்றை ஒழுங்கு செய்திருக்கின்றது. மேலும் அமைச்சரவை உற்பத்தித் திறன் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்யவும் ஒழுங்கமைக்கவும் தேசிய செயலணிக்குழு ஒன்றையும் அமைத்துள்ளது. மேலும் அரசாங்கம் தனியார் துறைக் கைத் தொழில்களின் ஆதரவுடன் திறமைகள் அபி விருத்தி நிதியம் ஒன்றை அமைப்பதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுத்திருக்கிறது.

## கைத்தொழில் தொழிலாளர் உறவுகளும் தொழிலாளர் உற்பத்திகளும்

தொழிலாளர் விவகாரம் தொடர்பாக தொழில் கொள்வோரின் கருத்துக்களை அறிந்து

கொள்வதற்காக அண்மையில் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி, இணக்கப் பாடான தொழிலாளர் உறவுகளும் தொழிலாளர் உற்பத்தித் திறனின் முன்னேற்றமும் கைத்தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதில் சிக்கலான விடயங்களாகப் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இந்த அளவீட்டின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் தொழில் திணைக்களத்தின் நடைமுறையில் உள்ள தகவல்கள் என்பவற்றின்படி பல வேலை நிறுத்தங்கள் தொடர்ந்தும் உயர்வாக இருக்கின்ற தோடு உற்பத்தித் துறையில் வேலை நிறுத்தங்கள் 1994 இல் அதிகமாக இருந்து 1995இல் குறை வடைந்துள்ளன. மேலும் அரைவாசிக்கும் மேற் பட்ட உற்பத்தியாளர்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின்படி தொழி லாளர் உறவுகள் முன்னேற்றமடைந்து கொண்டிருப்பதற்கான ஒரு ஊக்குவிப்பு சைகையைக் காட்டுகிறது.

உயர்ந்த கூலிகள் மற்றும் கூடிய நிதி அனு கூலங்கள் என்பன வேலை நிறுத்தத்திற்கான பிரதான கோரிக்கைகளாகக் காணப்பட்டன. இந்த வேலை நிறுத்தங்கள் உற்பத்தித் துறையின் உற்பத்தி செலவில் மேல் நோக்கிய அழுத்தத்துக்கு இட்டுச் சென்றது. நிதி அனுகூலங்கள் தவிர்ந்த வேலை நிறுத்தக் கோரிக்கைகளாக இட மாற்றங்கள், தொழிலாளர் இடைநிறுத்தங்கள், தொழிலாளர்களுக்கெதிரான ஒழுங்கமைந்த நடவடிக்கைகள் ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதி கொடுப்பனவுகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் ஏனைய வேலை நிறுத்த ங்களுக்கான அனுதாபங்கள் போன்ற விவகா ரங்கள் இந்த வேலை நிறுத்தங்களுக்குப் பின்னணி யாகவிருந்த ஏனைய காரணிகளாகும்.

உற்பத்தி இழப்புக்கு மேலதிகமாக நிரந்தர மாக கொள்வனவாளர்களை இழந்தமை, விற்பனை இழப்பு மூலப்பொருள் விரயம் மற்றும் ஏற்றுமதி வருமானம் குறைவடைந்தமை வேலை நிறுத்தம் காரணமாக உற்பத்தி நிறுவனங்களால் அனுபவிக்கப்பட்ட இழப்பு மேலும் சில விடயங்க ளில் கணிசமானளவுகளாகும். வேலை வாய்ப்பு இழப்புக்களும் பதிவு செய்யப்பட்டன.

தொழிலாளர்களதும், தொழில் கொள்வோர் களதும் உரிமைகள், கடப்பாடுகள் தொடர்பாக தெளிவாக வரையறுத்தல், தொழிலாளர்களதும் முகாமையினதும் கடமைகள், பொறுப்புக்கள்

**வரைபடம் 4.5**

**தொழிலாளர் உற்பத்தியாற்றல் சுட்டெண்ணும் முதலீட்டுச்சபையல்லா தனியார் துறையின் பெறுமதி கூட்டப்பட்ட மனித மணித்தியாலமும்**



சரியான அடிப்படையில் உறுதியாக இருத்தல் போன்றன தொழிலாளர் உறவுகளை முன்னேற்று மென பெரும்பாலான தொழில் கொள்வோர்கள் நம்புகின்றனர்.

அண்மைக்காலத்தில் நிறுவனங்கள் தமது தொழிலாளர் உற்பத்தித் திறனை முன்னேற்று வதற்கு பல நடவடிக்கைகளை எடுத்த போதிலும் இதில் அரைவாசி நிறுவனங்கள் மட்டுமே தமது தொழிலாளர் உற்பத்தித் திறனை அதிகரிக்க முடிந்தது. அளவீட்டு முடிவுகளின்படி தொழிலா ளர் உற்பத்தித் திறனை பலவீனப்படுத்திய மிகவும் சிக்கலான காரணிகளாக ஊழியர்களின் நடத்தைகள், வேலை ஒழுங்கில் காணப்பட்ட தவறுகள், பொறுமை இன்மையும் நீண்டகால உற்பத்தித் திறன் குறிக்கோளை அடைவதற்கான தியாக சிந்தை இன்மை, குறைந்தளவான ஊக்குவிப்பு, தொழில் சட்டங்களில் காணப்பட்ட குறைந்தளவான நெகிழ்ச்சித் தன்மை, குறைந்த ளவான பொதுப் போக்குவரத்து வசதிகள், குறைந்தளவான வதிவிட வசதிகள், அரசியல் தலையீடுகள் என்பன விளங்கின. கடன் அதிக ரிப்புடன் இணைந்ததாக உற்பத்தித் திறனை முன்னேற்றுதல், உயர் உற்பத்தி திறனிலிருந்து ஊழியர்கள் சாதகமான பயன்பாட் டைப் பெறத் தக்கதாக அவர்களுக்கு கல்வி அறிவூட்டல், வேலை ஒழுக்கங்களை முன்னேற்றுதல், பயிற்சி விதிகளைத் திசைதிருப்புதல், போக்குவரத்து வசதிகளை முன்னேற்றுதல் மற்றும் தங்குமிட வசதிகளை விரிவாக்கல் போன்ற முக்கிய பிரேர ணைகள் உற்பத்தி நிறுவனங்கள் தமது ஊழியர் உற்பத்தித் திறனை முன்னேற்றுவதற்காக முன் வைக்கப்பட சரியான அளவீடுகளாகும்.

## 4.8 கைத்தொழில் அமைவு

பெரும்பாலான கைத்தொழில்கள் கொழும்பு, கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் குவிந்துள்ளமையை கைத்தொழில் அமைவிடப் பரம்பல் காட்டுகிறது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1637 தொழிற்சாலைகளில் 87 சதவீதமானவை கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள 979 தொழில் முயற்சிகளைப் பொறுத்தவரை 78 சத வீதமானவை இந்த இரு மாவட்டங்களிலும் இருந்தன. (புள்ளிவிபர அட்டவணை 25) கடந்த காலங்களில் தொடர்ந்து வந்த அரசுகள் பிரதேச கைத்தொழில்களை மேம்படுத்துவதையும் அது தொடர்பாக கைத் தொழில்களை பிரதேச மயப்படுத்தவும் கடும் முயற்சிகளை எடுத்திருந்தன. இந்த முயற்சி களில் 200 ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டம், கொக்கல ஏற்றுமதி பதனிடல் வலயம், பல்லேகல கைத்தொழில் பூங்கா என்பன உள்ள டங்குகின்றன. தற்போதைய அரசின் கீழ் முழுப் பிராந்திய அபிவிருத்தி உபாயத்தின் ஒரு பகுதி யாக பிரதேச கைத்தொழில் பூங்காக்களை மேம்படுத்தல், தென்பகுதி அபிவிருத்தித் திட்டம், பிராந்திய அபிவிருத்தி வங்கிகளை அமைத்தல் போன்ற பாரிய வலியுறுத்தல்கள் முன் வைக்கப் பட்டுள்ளன.

அபிவிருத்தியடையாத பகுதிகளில் கைத் தொழில் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக பிராந்திய நிலையங்களில் காணப்படும் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை, சுற்றாடல் மாசுபடுத்த லுடனும், சுகாதாரத்துடனும் ஏனைய விடயங்களு டனும் இணைந்த அழுத்தங்களையும், பிரச்சனைக ளையும் குறைக்கக்கூடியதாக விருத்தி செய்யும் நோக்குடன் 1995இல் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் மொத்த மாக 1700 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகவும், சீதாவாக்கை, களுத்துறை ஆகிய இடங்களில் சருவதேச தரத்தை கொண்ட இரண்டு கைத் தொழில் பூங்கா அமைப்பை உள்ளடக்கியதாகவும் மற்றும் ஏனைய 23 பிராந்திய கைத்தொழில் பேட்டைகளை உள்ளடக்கியதாகவும் அமைந் துள்ளது.

சீதாவாக்கை கைத்தொழில் பேட்டை தொடர்பாக விரிவான பொறியியல் வடிவமைப்பு 1996இல் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டது. கட்டான என்ற இடத்தில் கைத்தொழில் பேட்டைப்பகுதி விமான நிலைய விரிவாக்கம் காரணமாக கை விடப்பட்டு அதற்கு மாற்றுத்திட்டமாக களுத்துறை மாவட்டத்திலுள்ள ஒரு பகுதி இனங்காணப் பட்டுள்ளது. இது தொடர்பாக ஆரம்ப விசார ணைகள், சாத்தியமான ஆய்வுகள், நிலம் கை யேற்றல் வேலை என்பன 1996இல் ஆரம்பிக்கப் பட்டன. மேலும் 9 கைத்தொழில் பேட்டைகள் தொடர்பாக பொறியியல் வடிவமைப்புக்கள்,

அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஒதுக்கீடு செய்தல், மற்றும் பௌதீக அபிவிருத்தி வேலை போன்ற ஆரம்ப வேலைகள் 1996 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டன. புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள தங்கொட்டுவ கைத்தொழில் பேட்டை தொடர்பான அபிவிருத்தி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு இனங்காணப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கிடையில் கைத்தொழில் துண்டங்கள் 1996இல் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

உள்ளார்ந்த தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு மேலதிகமாக நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகளான வீதிகள், தொடர்பூட்டல், விமான நிலையங்கள் துறைமுகங்கள் என்பன உதவியாக இருந்தால் பிரதேச கைத்தொழிலாக்கம் வெற்றிகரமாக இருக்கும். கட்டிச் செயற்படுத்தி உடமையாக்குதல் அல்லது கட்டிச் செயற்படுத்தி கைமாற்றுதல் ஒழுங்குகளின் கீழ் இவைகளில் சில சாத்தியமாக அமையும். எனினும் பாரிய அளவிலான உள்ளகக் கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிக்கும்போது நன்கொடையாளர்களின் உதவியுடன் அரசாங்கம் தொடர்புபடாவிட்டால் இது சாத்தியமற்றதாக அமைந்துவிடும். பொறுத்தமான விடத்து கட்டுதல், தொழிற்படுத்தல் உடமையாக்கல்/ கட்டுதல், தொழிற்படுத்தல், கைமாற்றம் செய்தல் என்ற அடிப்படையில் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் தேவைகளை விட்டுக்கொடுக்காமல் இதனைச் செய்ய வேண்டும்.